# **In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.57/2024 தேதி- 13.10.2025
(P.W.1) - மணிகண்டன்

குறுக்கு விசாரணை

1. வழக்கின் பிரதிவாதி புஷ்பலதா என்னுடைய சகோதரி என்றால் சரிதான். அவர் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். என் சகோதரி திருமணத்தின் போதுசர்வே எண்.604/4-ல் 1 செண்ட் சொத்து இஷ்டதானமாக கொடுத்தார் என்றால் சரிதான். மேற்சொன்ன 1 செண்ட் சொத்தில் பிரதிவாதி ஒரு கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். குளச்சல் கருங்கல் சாலை மேற்சொன்ன சொத்தின் வடக்கு தெற்காக செல்கிறது என்றால் சரிதான். கருங்கல் ரோட்டில் இருந்து தான் மேற்சொன்ன் கடைக்கு செல்ல முடியும் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண். 604/4-ல் 4-வது கண்டத்தில் உள்ள சொத்தானது எனக்கும், என் சகோதரர் வடிவேல் மற்றும் ஸ்டாலின்க்கு பொதுவானது என்றால் சரிதான். மேற்சொன்ன நபர்களை இவ்வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் அவர்களுக்கும் சேர்த்துதான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்சொன்ன நபர்கள் இவ்வழக்கின் முக்கிய கட்சி என்றாலும் அவர்களை சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

2. 2023-ஆம் ஆண்டு பிரதிவாதி வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்து கட்டுமானம் கட்டியதாக காவல் நிலையத்தில் புகார் ஏதும் அளிக்கப்பட்டதா என்றால் இல்லை. மேற்சொன்ன சம்பவம் நடந்தபோது நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் அதை நிரூபிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். பிரதிவாதிக்கு ஒரு பெண் பிள்ளை என்றாலும் தற்போது அவருக்கு 23 வயது என்றால் சரியல்ல, 2 பெண் பிள்ளைகள் ஆகும். மேற்சொன்ன பெண்பிள்ளையின் திருமணத்தின்போது மேற்சொன்ன 1 செண்ட் சொத்தை விலைக்கு கொடுக்க முயற்சி செய்தார் என்றாலும் அதை தடை செய்யவேண்டியும் வேறு யாரும் சொத்தை வாங்கக்கூடாது என்று இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மாமா பெயர் ரத்தினசாமி என்றால் சரிதான். நானும் என் மாமாவும் சேர்ந்து பிரதிவாதியின் கணவரை வெட்டி காயம் ஏற்படுத்தியதாக இரணியல் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CC.No.115/2021 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்

ஆனால் அது பொய் வழக்காகும். பிரதிவாதியின் கணவர் தற்போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். பிரதிவாதியை மேலும் கஷ்டபடுத்த வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.